DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**

PROSECUTION WITNESS No.19

| | |
|---|---|
| Name | : Dr.Suresh Prabhakar Kumar, |
| Father's Name | : Kumaradoss |
| Age | : 63 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 22nd day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துமனையில் மயக்க மருந்தியல் துறையில் போதராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் 2006 முதல் 2019 வரை அண்ணாநகர் பெரிபெரல் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்தேன். அப்போது 14.01.2012 அன்று 24 மணிநேர பணியில் இருந்தபோது, சுமார் 22 வயது மதிக்கத்தக்க நித்தியராஜ் என்ற நபரை காவல் ஒருவர் அவரது தோள்பட்டை தூக்க முடியவில்லை என்ற காரணத்திற்காக சிகிச்சைக்கு அழைத்துவந்தார். அதற்குமுன்பு நோயாளிக்கு 3 முறை தன்னிச்சையாக தோள்பட்டை மூட்டு விலகல் ஏற்பட்டுள்ளதாக நோயாளி கூறினார். எங்கள் மருத்துவமனையில் நண்பகல் 2 மணிக்கு மேல் நுண்கதிர்படம் எடுக்க இயலாது என்பதால் அவரை கீழ்பாக்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு

பரிந்துரைத்தேன். இதுசம்மந்தமாக நான் ஏற்படுத்திய புறநோயாளிச்சீட்டு என்னிடம் காட்டப்படுவதுதான் அது **அ.சா.ஆ.12.** இதுசம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை:-**

**மறுவிசாரணை** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**

PROSECUTION WITNESS No.20

| | |
|---|---|
| Name | : Dr.Gowrishankar, |
| Father's Name | : P.K.Sundaramoorthy, |
| Age | : 43 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 22nd day of September, 2025.

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசரசிகிச்சை பிரிவில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். 08.08.2011 முதல் 17.09.2013 வரை புழல் மத்தியசிறை–2ல் உள்ள சிறை மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். 16.01.2012 அன்று நான் காலை 9.00 மணியளவில் பணிக்கு சென்று உயர் பாதுகாப்பு பிரிவில் சிறைவாசிகளுக்கு சிகிச்சை வழுங்கினேன். கோரன்டைன் பிளாக்கில் உள்ள புதிய சிறைவாசிகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்தேன். அதன்பிறகு சிறை மருத்துவ மனையில் உள் நோயாளிகளுக்கு சிகிச்சை வழுங்க சென்றிருந்தேன். அப்போது நித்திய என்கிற நித்தியராஜ் த/பெ.சாம்ராஜ் என்பவரை பரிசோதித்தேன். அவர் உடலில் காயங்கள் இருந்தது. அவரை மேல் சிகிச்கைக்காக ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். அன்று காலை டாக்டர் கதிரவன் நித்தியராஜ் என்பவரது

மருத்துவ நிலையும் அவரை மேல் சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட வேண்டும் என்பதையும் எனக்கு தொலைபேசி மூலம் முன்னதாகவே தெரிவித்தார். நான் மேல் சிகிச்சைக்கு பரிந்துரைக்கும்போது அவருக்கு 2 கைகளிலும் அக்குள் பகுதிகளிலும் காயங்கள் இருந்தன. மேலும் 2 கைகளும் கால்களும் வீங்கி இருந்தது. வயிற்றுப்பகுதியில் 1 கன்றிய காயம் இருந்தது. அப்போது அவர் சுயநினைவுடன் இருந்தார். நான் அவரிடம் அவரை மேல் சிகிச்சைக்காக பரிந்துரைப்பதாக கூறினேன். அவர் அதற்கு நன்றி தெரிவித்து தான் காலைக்கடன் கழிக்க வேண்டுமென்று கூறினார். நான் ஆண் உதவி செவிலியர் மற்றும் சிறைவாசிகளோடு அவரை அனுப்பி வைத்தேன். காலைக்கடன் கழித்தபிறகு அவர் தனது மலத்தில் கறுப்பாக வருவதாக கூறினார். நான் அவரை பயப்படாதீர்கள் என்று ஆறுதல் கூறி ஆம்புலன்ஸ் வரவழைத்து அவரை ஸ்டெக்சரில் படுக்கவைத்து அனுப்பினேன். அதற்கு முன்பு வரை அவர் சுயநினைவுடன் இருந்தார் அவரது இதயத்துடிப்பு 1நிமிடத்திற்கு 102 ஆகவும் இரத்த அழுத்தம் 110/70 இருந்தது. அவர் சோர்வாக இருந்ததால் அவருக்கு ஆர்.எல் புளுயிட் ஐவி மூலம் செலுத்தப்பட்டது. ஆம்புலன்ஸ் ஸ்டெக்சரில் அவரை படுக்கவைத்ததும் அவர் மயங்கிவிட்டார். இதயத்துடிப்பு சரியாக உணரமுடியவில்லை. அதற்கு கைகளிலேயே சிபிஆர் கொடுத்தேன் அதன்பிறகு அவருக்கு சுயநினைவு வரவில்லை இருந்தாலும் இதயத்துடிப்பு இருந்தது. அவரை நான் ஆம்புலன்சில் ஏற்றி சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். 2 மணிநேரம் கழித்து ஜெயிலர் மூலமாக அவர் இறந்துவிட்டதாக தகவல் வந்தது. இதுசம்மந்தமான சிகிச்சை கோப்பு என்னிடம் காட்டப்படுவதுதான் ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக என்னை நீதித்துறை நடுவர் விசாரித்தார் பின்னர் சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை:-</u>**

நோயாளி சிறை மருத்துமனையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பு 14.01.2012 அன்று அண்ணாநகர் பெரிபெரல் மருத்துவமனைக்கும், கீழ்பாக்கம் மருத்துவ கல்லூரி மருத்துமனைக்கும், ராயப்பேட்டை அரசு மருத்துமனைக்கும், பரிந்துரைக்கப்பட்டார் என்றால் சரிதான். 15.01.2012 ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனைக்கும் பின்னர் ராயப்பேட்டை அரசு மருத்துமனைக்கும் பரிந்துரைக்கப்பட்டார் என்றால் சரிதான். ராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலோ, ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையிலோ அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்திருந்தால் நித்தியா என்கிற நித்தியராஜீக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறியிருக்கும் என்றால் காப்பாற்றப் பட்டிருக்கலாம். நித்தியா என்கிற நித்தியராஜீக்கு மேற்சொன்ன மருத்துவ மனைகளில் வலிநிவாரணி மற்றும் டிரிப்ஸ் தவிர வேறு சிகிச்சை எதுவும் வழங்கப்பட்டுள்ளதா என்றால் அவரை பல்வேறு விதமான பரிசோதனைகளுக்கு பரிந்துரைத்தபின்னர் சிறைக்கு அனுப்பாமல் ஏதேனும் ஒரு மருத்துவமனையில் எந்தப் பிரிவில் அவருக்கு சிகிச்சை தேவைப்படுகிறதோ அந்தப் பிரிவில் உள் நோயாளியாக சேர்திருந்தால்தான் அவருக்கான சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கும். நான் நீதித்துறை நடுவர் விசாரணையில் நான் அவர் மலம் கழிக்க சிரமப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு மலம் கழிக்க சிரமப்படும்போது வயிற்றுப் பகுதியில் அதிக அழுத்தம் கொடுக்கும்போது அவர் மயங்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான். சிறை மருத்துவ மனையிலும் அவருக்கு வலி நிவாரணியும் டிரிப்ஸ்ம் தவிர வேறு எதுவும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். மற்ற மருத்துவ மனைகளிலும் அதுதான் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

நான் போலீசார் விசாரணையில் இதயத்துடிப்பு, நாடித்துடிப்பு இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் இதயத்துடிப்பு இல்லை என்பதற்கும் இதயத்துடிப்பை உணரமுடியவில்லை என்பதற்கும் உள்ள வித்தியாசம் எனக்கு தெரியாமல் இருந்தது. 16.01.2012 அன்று நித்தியராஜை நான் பார்க்கும் போது அவருக்கு சரியான முறையில் சிகிச்சை வழங்கப்படவில்லை என்று தெரிந்தது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |

DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.

**Spl.S.C.No. 1/2024**
PROSECUTION WITNESS No.21

Name : Dr.Praburaman

Father's Name : Kanagaraman,

Age : 57

Address :

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 on the 22nd day of September, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துமனையில் நரம்பியல் அறுவைச்சிகிச்சை பிரிவில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.01.2012 அன்று அதே மருத்துவ மனையில் அதே பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தபோது சுமார் 22 வயது மதிக்கத்தக்க நித்திய என்ற நித்தியராஜ் என்பவரை அவசர சிகிச்சை பிரிவில் நரம்புப் பகுதியில் காயங்களுக்காக பரிசோதனை செய்தேன் அப்போது அவர் சுயநினைவுடன் இருந்தார். கை, கால்களை அசைத்தார். அவருக்கு தலைப்பகுதிக்கு சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது அதில் தலை மற்றும் மூளைப் பகுதிகளில் காயம் எதுவும் தென்படவில்லை. அதனால் அவருக்கு மூளை சம்பந்தப்பட்ட காயங்கள் இல்லை என்று பதிவு செய்தேன். அந்த மருத்துவ சிகிச்சை குறிப்பு என்னிடம் காட்டப்படுவது தான் அது அ.சா.ஆ.13, இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை:-</u>**

நித்தியராஜீக்கு தலைப்பகுதிக்கு எம்.ஆர்.ஐ எடுக்கப்படவில்லை. எம்.ஆர்.ஐ எடுத்திருந்தால் அவரது மெடிக்கல் கன்டீசன்ஸ் முழுமையாக தெரிந்திருக்கும் என்றால் இருக்கலாம். நித்தியராஜை எங்கள் மருத்துமனையில் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்திருந்தால் அவரை காப்பாற்றி இருக்கலாம் என்றால் அதுபற்றி என்னால் கூறமுடியாது ஆனால் வேறு வார்டுகளில் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கியிருக்கலாம்.

**<u>நீதிமன்றக் கேள்வி:-</u>**

பொதுவாக ஒருநபர் பல்வேறு விதமான துறைகள் சம்பந்தப்பட்ட பரிசோதனைக்கு உட்படுத்தும்போது அவரை மருத்துமனையில் உள்நோயாளியாக அனுமதிப்பது சம்பந்தமாக யார் முடிவெடுக்க வேண்டும் ?

**<u>பதில் :-</u>**

ஒரு நபரை பல்வேறு துறைகளில் பரிசோதனைகளுக்கு உட்படுத்தினாலும் எந்த துறை சம்பந்தப்பட்ட காயம் அல்லது நோய் பெரிதாக இருக்கிறதோ அந்தத் துறைதான் அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும் அதுவரை எமர்ஜென்சி மெடிக்கல் ஆபிசர்தான் நோயாளியின் சிகிச்சை சம்பந்தப்பட்ட முடிவுகளை எடுப்பார்.

**<u>மறுவிசாரணை</u>** :- இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |